2018 ஜூன் 1] [திரு. டி. ஜெயக்குமார்]

Fund *என்று ஒன்று இருக்கின்றது. கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி, நாகப்பட்டினம் போன்ற மாவட்டங்கள் அதிகமான அளவிற்கு கடல் சீற்றத்திற்கு ஆளாகும் என்பதனால்* concrete proposal *ஒன்றை நாம் தயார் செய்து, 1,100 கோடி ரூபாய்க்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன்மொழிந்து மத்திய அரசிற்கு அனுப்பியுள்ளது. அதனை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட மாண்புமிகு பிரதமரிடம் வலியுறுத்தியிருக்கின்றார். எனவே, அந்த நிதி வருகின்றபட்சத்தில், 13 மாவட்டங்களுக்கு இந்தப் பிரச்சினை நிச்சயமாக எதிர்காலத்தில் இருக்காது. இருந்தாலும், எந்தெந்த இடங்களில் உடனடியாக கடல் அரிப்பினைத் தடுக்க வேண்டும் என்பதற்காக* top priority *கொடுத்து ஒரு* list *தயார் செய்திருக்கின்றோம். அந்த* top priority list-*ல் நம்முடைய கன்னியாகுமரி மாவட்டத்தை மட்டும்* special *ஆக எடுத்து, அதற்கு ஒரு* programme *செய்திருக்கின்றோம். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை விதி 110-ன்கீழ் அது குறித்தான அறிவிப்பினைச் செய்வார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

(இ) மதுக்கடைகள் மீண்டும் திறக்கப்படுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டிடிவி தினகரன் அவர்கள்.*

திரு. டிடிவி தினகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் அம்மா அவர்கள் கடந்த 2016 தேர்தல் அறிக்கையில் தமிழக மக்களின் உணர்வுகளையும், கோரிக்கைகளையும் ஏற்று தமிழகத்தில் அப்போது இருந்த 6,672 மதுக்கடைகளைப் படிப்படியாகக் குறைப்பேன் என்று தெரிவித்திருந்தார்கள். அதன்படி, ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகு முதல் கட்டமாக 500 கடைகளை மூடுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டார்கள். அதைத் தொடர்ந்து தற்போதைய அரசு கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் 24 ஆம் தேதி மாண்புமிகு அம்மா அவர்களின் பிறந்த நாளன்று 500 கடைகளை மூடினார்கள். அதன்பிறகு நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் கிட்டத்தட்ட 3,321 மதுக்கடைகள் மூடப்பட்டன. தற்போது 3,866 கடைகள் இருக்கின்றன என்ற தகவலை நேற்றைய தினம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவையில் தெரிவித்தார்கள். ஆனால், கடந்த*

மே மாதம் 21 ஆம் தேதி வெளியிடப்பட்ட அரசாணையின்படி 810 கடைகளை மீண்டும் திறப்பதற்கு மாண்புமிகு அம்மா வழியிலே நடப்பதாக சொல்லிக்கொண்டிருக்கின்ற இந்த அரசாங்கம் முடிவெடுத்திருப்பது எப்படி நியாயமாகும்? (குறுக்கீடு) மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் நடப்பதாக சொல்லிக் கொண்டிருக்கின்ற இந்த அரசாங்கம் ஓர் அரசாணை வெளியிட்டு 810 கடைகளை மீண்டும் திறப்பதற்கு முயற்சி செய்வது சரியா? 'கேட்காமலேயே கொடுக்கப்படும், நீங்கள் தட்டுங்கள் திறக்கப்படும் அம்மா வழியில்' என்று சொல்பவர்கள் 810 கடைகளை மீண்டும் திறப்பதற்கு முயற்சி செய்வதற்குக் காரணம் என்ன? அதுபோல, நேற்று பேரவையிலே பேசிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள். . .

முற்பகல் 11-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வாய்ப்பு இல்லை.

திரு. டிடிவி தினகரன்: அவர் 4, 5 நாட்களுக்கு முன்பாகப் பேசியபொழுது, கோபத்திலே அவர்கள். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வாய்ப்பு இல்லை.

திரு. டிடிவி தினகரன்: கேள்வி நேரத்திலே ஆளுங்கட்சி உறுப்பினர்கள் எதை வேண்டுமானால் பேசினால் நீங்கள் allow செய்கிறீர்கள். என்னைப் பற்றி மறைமுகமாகப் பேசியதற்கு, தங்கள்மூலம் நான் மாண்புமிகு அமைச்சரிடம் பதிலை எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், சற்று பொறுமையாக இருங்கள். நான் தெளிவாகச் சொல்கிறேன். உங்களைப் பற்றி உங்கள் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லியிருந்தால், நீங்கள் பேசுவதற்கு நான் அனுமதி தருவேன். உங்களைப் பற்றியல்ல. அவர் பொதுவாக யாரைப் பற்றியோ சொன்னார். அதற்காக நீங்கள் உங்களுடைய விளக்கத்தைத் தர வேண்டாம். நீங்கள் மதுக்கடைகள் குறித்து விவரம் கேட்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) அது குறித்து என்னவென்று சொல்லுங்கள். நான் அமைச்சர் அவர்களிடம் கேட்கிறேன். (குறுக்கீடு)

(மாண்புமிகு உறுப்பினர் திரு. டிடிவி தினகரன் நின்று கொண்டு பேசிக் கொண்டிருந்தார்.)

வாய்ப்பு இல்லை. நான் தெளிவாகச் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர், நேற்றைக்கும், இன்றைக்கும் யாரும் உங்களுடைய

பெயரைக் குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை. அவ்வாறு சொல்லியிருந்தால், நிச்சயம் நீங்கள் பேசுவதற்கு வாய்ப்புத் தருவேன். இருந்தாலும், அதன்மீது நான் நடவடிக்கை எடுப்பேன். (குறுக்கீடு)

(மாண்புமிகு உறுப்பினர் திரு. டிடிவி தினகரன் தொடர்ந்து நின்று கொண்டு பேசிக் கொண்டிருந்தார்.)

தேவையில்லாமல் வேறு யாரைப் பற்றியோ பொதுவாக அவர்கள் சொன்னதற்கெல்லாம், நீங்கள் விளக்கம் கேட்டால் நான் வாய்ப்பு தர முடியாது. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், தங்களிடம் பதில் இருக்கிறதா? சொல்லுங்கள். (குறுக்கீடு)

(மாண்புமிகு உறுப்பினர் திரு. டிடிவி தினகரன் தொடர்ந்து நின்று கொண்டு பேசிக் கொண்டிருந்தார்.)

சற்று பொறுங்கள். நான் உங்களுக்குப் பேச வாய்ப்பு தந்துவிட்டேன். (குறுக்கீடு) நீங்கள் கேட்ட மதுவிலக்கு குறித்தும் மற்றது குறித்தும் துறை சம்பந்தமாகக் கேட்டிருக்கிற கேள்விகளுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்கிறார். நீங்கள் தயவுசெய்து அமருங்கள். (குறுக்கீடு)

(மாண்புமிகு உறுப்பினர் திரு. டிடிவி தினகரன் தொடர்ந்து நின்று கொண்டு பேசிக் கொண்டிருந்தார்.)

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். . .(குறுக்கீடு)

(மாண்புமிகு உறுப்பினர் திரு. டிடிவி தினகரன் தொடர்ந்து நின்று கொண்டு பேசிக் கொண்டிருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வாய்ப்பு இல்லை. மாண்புமிகு உறுப்பினர், zero hour-ல் உங்களுக்குக் கொடுத்த வாய்ப்பை நீங்கள் நல்லபடியாகப் பயன்படுத்துங்கள். துறை சம்பந்தமாக கேள்விகளைக் கேட்டால் அதற்கு நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் பதிலைத் தரச் சொல்லிக் கேட்பேன். (குறுக்கீடு) நான் சொல்கிறேன், தெளிவாகச் சொல்கிறேன். இந்த அவையைப் பொறுத்தவரையில், எந்த ஓர் உறுப்பினரும் தனிப்பட்ட முறையில் ஒருவரைப் பற்றிக் குறிப்பிட்டால், அதற்கு அந்த

உறுப்பினர் விளக்கம் சொல்வதற்கு நான் வாய்ப்பு அளிப்பேன். ஆனால், உங்களைப் பற்றி யாரும் சொல்லாதபோது, மாண்புமிகு அமைச்சர்கள் பொதுவாகப் பேசுவதற்கெல்லாம் நீங்கள் விளக்கம் கேட்டால், நான் விளக்கம் தர அனுமதிக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) அதை நான் அனுமதிக்க முடியாது. நீங்கள் தயவுசெய்து அமருங்கள். இதற்குமேல் நான் உங்களைப் பேச அனுமதிக்க முடியாது. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர், விளக்கம் இருந்தால் தெரிவிக்கலாம்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல 2016 ஆம் ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேர்தல் அறிக்கையில் படிப்படியாக மதுக் கடைகள் குறைக்கப்படும் என்றும், பூரண மதுவிலக்குதான் நம்முடைய கொள்கை என்பதையும் தெளிவாக மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருந்தார்கள். அதனடிப்படையிலே மாண்புமிகு அம்மா அவர்கள் 23-5-2016 அன்று முதலமைச்சராகப் பதவியேற்றவுடன் முதல் கையெழுத்தாக 500 மதுக்கடைகளை மூட வேண்டும் என்றும், அதுபோல, 12 மணி நேரம் செயல்பட்டு வந்த கடையின் நேரத்தை, அதாவது, காலை 10-00 மணியிலிருந்து இரவு 10-00 மணிவரை செயல்பட்டதை, நண்பகல் 12-00 மணியிலிருந்து இரவு 10-00 மணி வரை செயல்படும் என்றும் குறைத்தார்கள். 19-6-2016 அன்றிலிருந்து 500 மதுக்கடைகள் குறைக்கப்பட்டன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் மாண்புமிகு அம்மா அவர்களின் பிறந்த நாளான 24-2-2017 அன்று, 500 கடைகள் குறைக்கப்பட்டன. ஆக மொத்தம், நான் நேற்றைய தினமே விளக்கமாகச் சொல்லியிருந்தேன். மொத்தம் 6,715 கடைகளில், 1,000 கடைகள் மூடப்பட்டதற்குப் பின்னால், 5,715 கடைகள் இருக்க வேண்டும். ஆனால், தற்போது இருக்கின்ற மொத்தக் கடைகளின் எண்ணிக்கை 3,866 ஆகும். ஏற்கெனவே இருந்த 810 கடைகளுக்கு உயர் நீதிமன்றம் தடையாணையை விதித்த காரணத்தினால், அதனை எதிர்த்து அரசு உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றோம். என்ன காரணம் என்று சொன்னால், ஏற்கெனவே அங்கே கடைகள் இருந்தன. அதுமட்டுமல்லாமல், தற்போது விழிப்புணர்வு ஏற்படுத்தி, படிப்படியாகத்தான் நாம் கடைகளைக்*

2018 ஜூன் 1] [திரு. பி. தங்கமணி]

குறைக்க வேண்டும். பக்கத்து மாநிலங்களிலிருந்து கள்ளச் சாராயம் நமது மாநிலத்திற்குள் வந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கொள்கையின்படி நாங்கள் மதுக்கடைகளைப் படிப்படியாகக் குறைப்பதற்குண்டான நடவடிக்கையை எடுத்திருக்கின்றோம்.

முற்பகல் 11-40

அப்படி 810 கடைகளை எடுத்துக்கொண்டாலும்கூட, இன்னும் 700 கடைகள் நாங்கள் குறைவாகத்தான் வைத்திருக்கின்றோம். அம்மா அவர்களின் ஆட்சியை வழிநடத்திக் கொண்டிருக்கின்ற காரணத்தினால்தான் 6,700 மதுபானக் கடைகள் என்று இருந்தது இப்போது 3,866 கடைகளாகக் குறைக்கப்பட்டு இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) "நீங்கள் அம்மா அவர்களின் கொள்கையில் வந்தவர்கள்" என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குச் சொல்கின்றேன். 2002 ஆம் ஆண்டிலிருந்து இதுகாறும் தமிழகத்திலே 25 சதவிகிதம் மதுபான சப்ளை கொடுத்த ஆலை யாருடையது? அவர்களுடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களுடையது தானே! மாண்புமிகு அம்மா அவர்கள் மறைந்ததற்குப் பின்னால், அம்மா அவர்களின் கொள்கையை ஏற்றுக்கொள்வதாக இருந்திருந்தால், அவர்கள் "நாங்கள் உடனடியாக மதுபான ஆலைகளை மூடுகிறோம்" என்று சொல்லியிருந்தால், அவர்கள் இங்கே வந்து கேள்வி கேட்பதற்குத் தகுதியானவர்கள் என்று நான் நினைப்பேன். ஆனால், அங்கே வருமானம் வர வேண்டும், மக்கள் மத்தியில் வந்து அம்மா அவர்களுடைய கொள்கைக்கு விரோதமாக இந்த அரசு நடக்கிறது என்ற ஒரு கருத்தை இங்கே பதிவுசெய்வதன் வாயிலாக, உண்மையை மூடி வைக்க முடியாது, மக்களிடத்திலே மாற்றிச் சொல்ல முடியாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, அவ்வளவுதான் விவாதம். மேற்கொண்டு இதில் விவாதம் எதுவும் இல்லை. நான் மைக் கொடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. தினகரன் அவர்கள் பேசியது அவைக் குறிப்பில் பதிவாகும். நீங்கள் மைக் இல்லாமல் பேசியது எதுவும் அவைக் குறிப்பில் வராது. (குறுக்கீடு)*

[பேரவைத் தலைவர்] [2018 ஜுன் 1

திரு. தினகரன், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொதுவாக குடும்பம் என்று சொன்னார். நீங்கள் ஏன் அதைப் பற்றிப் பேசுகிறீர்கள்? அதெல்லாம் ஒன்றும் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களைக் குறித்துப் பேசினால், உங்களுடைய குடும்பம் என்று சொல்லியிருந்தால், நீங்கள் பேச நான் அனுமதி தருவேன். அதற்கு நீங்கள் விளக்கம் சொல்லலாம். உங்களுடைய குடும்பம் என்று அவர் சொல்லவில்லை. அவர் ஒரு குடும்பத்தைக் குறிப்பிட்டு சாதாரணமாகச் சொன்னதை நாம் அப்படி ஏற்றுக்கொள்ள முடியாது. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அமருங்கள்.

(ஈ) சிறுபான்மை ஆங்கிலோ இந்திய பள்ளிகளுக்குப் பாதுகாப்பு வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ் அவர்கள்.*

DR. (TMT) NANCY ANN CYNTHIA FRANCIS: Hon'ble Speaker, Hon'ble and respected Chief Minister Thiru Edappadi K. Palanisamy Sir, (Interruptions) Hon'ble and respected Deputy Chief Minister (Interruptions) Thiru O. Panneerselvam Sir, thank you for this opportunity given. My beloved Amma who still lives in all of us had always a special place for the Anglo Indian Community and… (Interruptions)

(மாண்புமிகு உறுப்பினர் திரு. டிடிவி தினகரன் நின்று கொண்டு பேசிக் கொண்டிருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள், அமைதியாக இருங்கள்.*

DR. (TMT) NANCY ANN CYNTHIA FRANCIS: I am ever grateful to this great person, my beloved Amma, for nominating me for the second term and to represent the Anglo Indian Community. (Interruptions)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. தினகரன், நீங்கள் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள்* raise *செய்திருக்கிறீர்கள். அவை நடவடிக்கைகளைப் பாருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) ஒன்றுமில்லை, நீங்கள் உட்காருங்கள்.*